III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.125/2017 and 355/2019

Deposition of witness for the Defendant/DW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 12-03-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : மாதேஸ்குமார் | Village | : |
| Father's / Husband's Name | : குப்புசாமி | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு அசல் வழக்கு எண்.125/2017 வழக்கின் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

வழக்கு சொத்தின் வடக்கு பகுதியில் அதனை ஒட்டியுள்ள நில உரிமையாளரின் காம்பவுண்ட் சுவர் இருக்கின்றது. அந்த சுவரின் தெற்கு பக்கத்தில் தான் தாவா சொத்து இருக்கின்றது. தாவா சொத்தின் மேற்கு பகுதியில் தான் வழிப் பாதை இருக்கின்றது. என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.10 ஆவணத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்ற வரைபடத்தின் தாவா சொத்தின் வடக்கு பக்கத்தில் 20 அடி ரோடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வடக்கு பகுதியில் உள்ள சொத்து A, B, C, D என்று எங்களுக்குள் பிரிக்கப்பட்டு அதற்கு வழியாக இந்த 20 அடி ரோடு காட்டப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் நான் சொன்னதை போல A, B, C, D சொத்துகளுக்கு நடுவே வழிப்பாதை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் வடக்கு புறத்தில் வழிப்பாதை காட்டப்பட்டுள்ளது. என்னுடைய கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரத்திற்கும் வாதியின் சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் தவறுதலாக வாதியின் சொத்தை உரிமைகோருகின்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கின்ற இந்த வழக்கோடு சேர்த்து கூட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகின்ற அசல் வழக்கு எண்.355/2019 வழக்கு வாதுரையில் கண்டுள்ள சொத்து விவரத்தில் வழக்கு சொத்தின் காம்பவுண்ட் சுவர் எதுவும் அமைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.125/2017 வழக்கில் நான் தாக்கல் செய்திருக்கின்ற எதிர்வழக்குரையில்

வாதி என்னுடைய காம்பவுண்ட் சுவரை இடித்துவிட்டார்கள் அதனால் போலிசில் புகார் கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண்.1155/2017 என்றால் சரிதான். இந்த முதல் அறிக்கையை quash செய்யக்கோரி வாதியும் அவரது தகப்பனாரும் மாண்புமிகு சென்னைஉயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து அதில் நான் ஒரு எதிர்மனுதாரர் என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞர் மூலம் அந்த மனுவில் எதிர் வழக்காடி இருக்கிறேன். அந்த வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு சொத்தில் எந்த காம்பவுண்ட் சுவர் கிடையாது என்றும் சிவில் வழக்கு கிரிமினல் வழக்காக தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என்று முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்து உத்தரவிட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வா.த.சா.ஆ.30 ஆக தாக்கல் செய்திருக்கின்ற போட்டோக்களின் சான்றிட்ட நகல்கல் நான் தாக்கல் செய்திருக்கின்ற அசல் வழக்கு எண்.355/2019 வழக்கில் நான் தாக்கல் செய்த போட்டோக்கள் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த புகைபடங்கள் எதுவிலும் காம்பவுண்ட் சுவர் இருப்பதான புகைபடம் எதுவும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.125/2017 வழக்கில் காம்பவுண்ட் சுவர் இருப்பதாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு உத்தரவை பற்றி நான் தெரிந்து கொண்டே தெரியாது என்று சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தவறான ஆவணங்களின் அடிப்படையிலும் வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வழக்காடி வருகின்றேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வா.த.சா.ஆ.23, 54 ஆவணங்களில் தாவா சொத்து காலி இடமாக காட்டப்படுகின்றது என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்பொழுது காலி இடமாக தான் உள்ளது என்றால் அதிலிருந்த காம்பவுண்ட் சுவரை இடித்துவிட்டார்கள் அதனால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. வாதி அவர் கோரியுள்ளபடி பரிகாரம் பெறத்தக்கவர் என்றால் சரியல்ல.

(8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).